பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 30 வெள்ளிக்கிழமை 16.10.2020 கதிர் 211

## ஊடகவியலாளர்களுக்கும் தனிமைப்படுத்தப் பணிப்பு

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்ற ஊடக 2

# அதி ஆபத்து நிலைமை தோன்றினால் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கொரோனா அதி ஆபத்து நிலை தோன்றினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஊரடங்குச் சட்டத்தை அமுல்செய்வதைத்தவிர்க்க முடியாதுபோகும் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஏற்கனவே அதி ஆபத்து என்று கருதப்பட்ட பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று மாத்திரம் 68 பேர் கொரோனாத் தொற்றுடன் கண்டறியப்பட்டனர். இவர்களில் 22 பேர் தனிமைப் 2

## '20' தொடர்பில் 2 நாள் விவாதம்

கொழும்பு, ஒக் 16

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடைபெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் குறித்த விவாதத்தை நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. 2

## மின் உயர்த்தி உடைந்து விழுந்து இருவர் மரணம்

கண்டி, லெவல்ல பகுதியில் இன்று முற்பகல் தற்காலிக மின் உயர்த்தி உடைந்து விழுந்ததில் இருவர் பலியாகியுள்ளனர்.

குறிப்பிட்ட அளவை விடவும் அதிகமான கட்டுமானப் பொருள்களை ஏற்றிச் சென்றதாலேயே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

இதையடுத்து ஒருவர் சம்பவ இடத்திலும் மற்றையவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்துள்ளனர்.

55 மற்றும் 57 வயதுகளு 2

# முழு இலங்கையும் கொரோனா தொற்று வலயமாக அறிவிப்பு

### பொலிஸ் பேச்சாளர் தகவல்



கொழும்பு, ஒக் 16

நாட்டின்தற்போதையநிலைமையில் முழு நாட்டையும் கொரோனாத் தொற்றும் வலயமாக அறிவிக்க நேரிட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

எனினும், இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவான வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

## யாழ்ப்பாணத்தில் கைக்குண்டுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணத்தில் கைக்குண்டு வைத்திருந்த குற்றசாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று மோட்டார் சைக்கிளில் சந்தேகத்திற்கிடமாகநின்ற இளைஞரிடம் இருந்தே கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. 2

## நல்லாட்சியினாலேயே இலங்கையில் பீதி

### இப்படிக் கூறுகின்றார் பீரிஸ்

கடந்த அரசின் காலத்தில் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக நாடு இன்னும் பீதியிலேயே உள்ளது எனக் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் 2

## வவுனியாவில் தனிமையில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு!

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு இந்தக் குடும்பஸ்தரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறுகண்டெடுக்கப்பட்டவர் உக்கிளாங்குளம்பகுதியைச்சேர்ந்த ஜெகநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அந்தக் குடும்பஸ்தர் சம்பவ தினத்தன்று உக்கிளாங்குளம் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில்தனிமையில் இருந்துள்ளார்.

இந்தநிலை 2

# '20' திருத்தத்துக்கு எதிராக களமிறங்கும் இளைஞர்கள்




அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நாட்டுக்கு ஆபத்தானது என ஜனநாயகத்துக்கான ஒன்றிணைந்த இளையோர் அணி தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்த அணியினர் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

20 ஆவது திருத்தம் தேவையற்றது.ஏனெனில் இது நாட்டுக்கு ஆபத்தானது. இதை நிறைவேற்றும் 2

## தமிழரின் வயல் காணி பிணக்கு: விரைவில் உரிய சட்ட நடவடிக்கை

### சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களான, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்களில், அக்காணிகளுக்குரிய விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகச்செல்லும்போது அரச திணைக்களங்களால் 2

## 3 ஆவது அலை ஆரம்பம் எங்கு? மர்மம் தொடர்ந்தும் நீடிக்கின்றது

இலங்கையில் கொரோனாவைரஸ்மூன்றாவது அலை தாக்கத்தின் ஆரம்ப புள்ளி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. புலனாய்வுப் பிரிவினரும், சுகாதார அதிகாரிகளும் தொடர்ந்தும் இது பற்றி அவதானம் செலுத்தி வருகின்றனர்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த திவுலப்பிட்டிய பகுதிபெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானமையையடுத்து அத் தொழிற்சாலை ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்டபீசி.ஆர்.பரிசோதனையில் பலருக்கு வைரஸ் தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டது. அவர்களுடன்நெருங்கி பழகியவர்களுக்கும் வைரஸ் பரவியுள்ளது.

இதன்படி மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலைகொரோனாகொத்தணிபரவல்மூலம்கடந்த 3ஆம்திகதிமுதல்நேற்று வரை நாட்டில் ஆயிரத்து 770 மேற்பட்ட 2

## இளைஞரின் முயற்சிக்கு சுமந்திரன் வரவேற்பு!

20 ஆவது திருத்தத்தின் ஆபத்துக்களை வெளிப்படுத்தும் விதமாக ஜனநாயகத்துக்கான ஒன்றிணைந்த இளைஞர் அணி என்ற பெயரில் சுயாதீன இளைஞர்கள் குழு யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் மாநாடு நடத்தி வெளியிட்டிருக்கும் அறிவித்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. வரவேற்றிருக்கின்றார்.

"இதனை நாம் வரவேற்கிறோம். இது ஒரு நல்ல - முக்கியமான - செய்தி. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் தொடர்பில் இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து அதன் கனகாத்திரம் உணர்ந்துசெயற்படபுறப்பட்டிருக்கின்றமை நல்ல திருப்பம். அவர்களின் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## முழு இலங்கையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச மற்றும் தனியார் நிறுவனங்களை வழமை போல் இயக்க முடியும்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நிறுவனங்களின் பிரதானிகள் கடமை.

அதிகளவான ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனங்களில் தினமும் சேவைக்கு வரக் கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை பிரதேச சுகாதார அதிகாரிகள் தீர்மானிப்பார்கள்.

இவ்வாறு வரும் ஊழியர்கள் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியைப் பேணுவது கட்டாயம் என்பதுடன் அடிக்கடி உடல் உஷ்ணத்தை கண்காணிக்க வேண்டும் – என்றார்.

## ஊடகவியலாளர்களுக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியலாளர் ஒருவருக்கு கொரோனா வைரஸ்தொற்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே ஏனைய ஊடகவியலாளர்களையும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து ஊடகவியலாளர்களின் விவரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களுக்கு சுகாதாரத்துறை விரைவில் சுகாதார ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கும் என்றும் அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. தற்போது ஊடகவியலாளர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளாரா இல்லையா என்பது தொடர்பாக சோதனை முடிவுகள் கிடைக்கும் வரை ஊடகமாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து ஊடகவியலாளர்களும் பாதுகாப்பாக இருக்குமாறு அத்திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

## மின் உயர்த்தி உடைந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைய இருவரே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

தற்காலிக மின் உயர்த்தி மூன்றாவது மாடியில் இருந்தே அறுந்து விழுந்துள்ளது.

## இளைஞரின் முயற்சிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகையசெயற் பாட்டுக்கு எங்களின் முழுமையான ஆதரவு உண்டு. இந்த முயற்சியை அவர்கள் மனம்தளர விடாது தொடர வேண்டும்." – இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## அதி ஆபத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தல் நிலையங்களில் இருந்தும், 46 பேர் தொற்றாளிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தும் கண்டறியப்பட்டனர்.

மினுவாங்கொடை, கட்டுநாயக்க மற்றும் கம்பஹா பகுதிகளில் இருந்தே இவர்கள் கண்டறியப்பட்டனர்.

இதேவேளை, கொழும்பில் இருந்து இரண்டு தொற்றாளிகளும், வத்தளை மற்றும் கந்தானையில் இருந்தும் தொற்றாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர் – என்றார்.

## '20' தொடர்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இது பற்றி கலந்துரையாடி முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 22 வயது மதிக்கத் தக்க கிளிநொச்சி, பரந்தன் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என யாழ். பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## 3ஆவது அலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளமை பீ.சீ.ஆர். பரிசோதனைமூலம் கண்டறியப்பட்டுள்ளது.

திவுலப்பிட்டிய பெண்ணுக்கு எவ்வாறு வைரஸ் தொற்றியது என்பது தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. எனினும், பல நாள்கள் கடந்தும் ஆரம்ப புள்ளியை இன்னும் கண்டறியமுடியாமல் உள்ளது.

## வவுனியாவில் தனிமை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே அவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸா ரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் உயிரிழந்தவரின் வாயில் இருந்து ஒருவகை நுரை வெளியேறியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (100)

# ஊரடங்கை மீறிய 167 பேர் கைது!

கம்பஹாவில் பொலிஸ் தனிமைப் படுத் தல் ஊரடங்கு உத்தரவைமீறிய 167 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதுவரை 40 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த நான்காம் திகதி முதல் இன்று (வெள்ளிக்கிழமை) காலை ஆறு மணி வரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 'தமிழரின் வயல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்கப்படுதல் மற்றும், அங்குள்ள தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள் அபகரிக்கப்படுதல் போன்ற பிரச்சினைகளுக்குவிரைவில்சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் மற்றும் கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பின் தலைவர் கி.சிவகுரு ஆகியோர் அடங்கிய குழுவினர் வவுனியா மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று சுமந்திரன் எம்.பியைச் சந்தித்து இக்காணிப் பிரச்சினைகள் தொடர்பில் முறையிட்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள், கடந்த 1984ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, பின்னர் 2012ஆம் ஆண்டு மீள் குடியேற்றப்பட்டிருந்தனர். அவர்களின் வயல் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் பேசியிருந்தோம்.

அந்தக் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியாமல் தடுக்கப்படுவதும், சிலருடைய காணிகள் அபகரிக்கப்பட்டு வேறுநபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பிரச்சினை தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் அப்பகுதி கமக்கார அமைப்பின் தலைவர் அடங்கிய குழுவினர் என்னைச் சந்தித்து முறையிட்டுள்ளனர்.

இந்தச் பிரச்சினை தொடர்பில் வெவ்வேறு பிரிவுகளாகப் பார்வையிட்டு உரிய சட்டநடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருக்கின்றேன் – என்றார்.

## '20' திருத்தத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்சத்தில் சிறுபான்மையின மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

அதைஎதிர்ப்பதற்குநாம்அனைவரும் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக இளைஞர்கள் இந்த விடயத்துக்கு எதிர்ப்பை வெளியிட முன்வர வேண்டும். அரசியல் தலைவர்கள் இந்த விடயம் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய அவசியம் தற்போது காணப்படுகின்றது.

அதேபோல் நாடாளுமன்றத்திலும் கட்சி பேதம் பாராது அனைவரும் 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

அதேபோல்தற்போதையகொரோனா சூழ்நிலையில்மக்களை ஒருங்கிணைத்து 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்வது சாத்தியமற்ற ஒரு விடயம். எனினும், மக்கள் மத்தியில் 20ஆவது திருத்தத்தின் தீமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவது எமது பிரதான நோக்கமாகும். அதேபோல் நாங்கள் இளைஞர் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து மூன்று விடயங்களைச் செயற்படுத்தவுள்ளோம்.

அதில் ஒன்று, 20ஆவது திருத்தம் தொடர்பாக புதிய முயற்சிகள் அனைத்தையும் கைவிட்டு மக்கள் கருத்துப் பகிர்வுடன் புதிய அரசமைப்பை உருவாக்கப்பட வேண்டும்.

இரண்டாவது, சிறுபான்மை மக்களை 20ஆவது திருத்தம் அதிகளவில் பாதிக்கும் என்பதால் சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகள் இனம், மொழி மற்றும் மதம் பார்க்காது நாடாளுமன்றத்தில் குறித்த சட்ட வரைவுக்கு எதிராகச் செயற்பட வேண்டும்.

மூன்றாவது, மக்கள் தீர்ப்புக்கு இந்தத் திருத்தம் வருமாக இருந்தால் அனைத்து மக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்.

போன்ற விடயங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது நமது செயற்பாடாக அமையவுள்ளது. இன்றிலிருந்து இந்தச் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளோம் – என்றார்கள்.




## நல்லாட்சியினாலேயே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குறித்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

குறிப்பாக 2015 முதல் 2019 வரை நாட்டில் தேசிய பாதுகாப்பு மீது சர்வதேச அழுத்தம் இருந்தது. அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி, கிட்டத்தட்ட 30ஆண்டுகளாக நாட்டைச் சூழ்ந்திருந்த பயங்கரவாதத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதில் உளவுத்துறையுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தார்.

குறிப்பாக, உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு குடியேற்றவாசிகளை கையாள சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடவுச்சீட்டு வழங்கும்போது இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டினரின் சுற்றுப்புறங்களை முறையாக ஆய்வு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டு இருந்தது.

ஆனால், கடந்தகாலத்தில் அவ்வாறான செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. உதாரணமாக, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் ஐ.ஜி.பி. மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறிய கருத்துக்கள் அவர்கள் தேசிய பாதுகாப்பை எவ்வாறு கையாண்டனர் என்பதை வெளிப்படுத்துகின்றது – என்றார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தமிழ் தேசியத் தரப்புகளின் இணைவு

இலங்கைத் தமிழர்களின் தேசியத்தையும், தனித்துவத்தையும் இருப்பையும் பேணிப் பாதுகாத்துத் தக்கவைப்பதற்காகத் தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் ஒன்றுபட வேண்டும் என்று இப்பத்தியில் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அது தொடர்பாகக் காத்திரமான சில முன் முயற்சிகளை மூத்த தமிழ்க் கட்சிகளில் ஒன்றான இலங்கைத் தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராசா முன்னெடுத்து வருகின்றமை சிலாகிக்கத் தக்கது.

தியாகி திலீபன் நினைவேந்தலைச் செய்ய விடாது பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு தடுத்த போது, தமிழர்களுக்கு எதிரான அந்த அடக்குமுறை தமிழ்த் தேசிய சக்திகளை ஒரு தளத்தில் ஒன்றுபடுத்துவதற்கான கட்டாயத்தை ஏற்படுத்தியது.

அது மட்டுமல்ல. அந்த ஒன்றுபடுதல் மூலம் – ஒன்றிணைவின் வாயிலாக – எதிர்த் தரப்பில் மூர்க்கத்துடன் விஸ்வரூபம் பெற்றிருக்கும் பேரினவாதத்தின் அடக்குமுறையை ஐக்கியமாக நின்றால் வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம் என்ற படிப்பினையையும் நம் தலைவர்கள் பெற முடிந்தது.

அந்தப் பின்புலத்திலேயே தமிழ்த் தேசிய சக்திகளை – கட்சிகளை – ஒரு தளத்தில் ஒன்றுபட்டுச் செயற்பட வைக்கும் தன் முயற்சிகளைத் திரும்பவும் முடுக்கி விட்டிருக்கின்றார் மாவை சேனாதிராசா.

அதன் ஒரு கட்டமாக தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் தரப்புகளின் பிரதிநிதிகளை நாளை பகல் அடுத்த சுற்றுக் கலந்துரையாடலுக்கு அழைத்திருக்கின்றார் அவர்.

இந்தக் கூட்டம் தொடர்பில் தீர்மானிக்கவும் அவ்விவகாரம் சம்பந்தமாகப் பின்பற்ற வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து ஆராயவும் ஐந்து தமிழ்க் கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இன்று மாலை யாழ்ப்பாணத்தில் கூடவிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசு, ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளும், அவற்றுடன் சேர்ந்து நிற்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பில் ஒரு தளத்தில் ஏற்கனவே தனித்து இயங்கி வருகின்றன.

அதே சமயம், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் ஐந்து தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியாகச் செயற்பட்டு வருகின்றன.

மற்றொரு புறத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தனக்குள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியையும் உள்ளடக்கி இயங்கி வருகின்றது.

மேலும், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் போன்றவையும், தமிழ்த் தேசிய இலக்குடன் செயற்பட்டு வருகின்றன.

தெற்கில் நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை போன்ற வலிமைகளுடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிருக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதம், சிறுபான்மை இனங்களை – குறிப்பாகத் தமிழினத்தை – அடக்கி, ஒடுக்கி, இந்தத் தீவின் அந்நியப் பிரஜைகளாக அல்லது வந்தேறு குடிகளாகக் காட்ட முழு முனைப்புடன் செயற்படுகின்றது. மூர்க்கத்துடன் காரியமாற்றுகின்றது.

இந்தப் பேரழிவு அச்சுறுத்தலில் இருந்து தமிழினம் மீண்டு, தன்னைத் தனது தாயகத்தில் தற்காத்து, நிலைநிறுத்தி, அதைத் தக்க வைக்க வேண்டுமானால் பேரரக்க வடிவம் எடுத்திருக்கும் பேரினவாதத்துக்கு துணிச்சலுடன் முகம் கொடுத்தாக வேண்டும். இல்லையேல் இந்தத் தீவில் தமிழினத்தின் இருப்பு இல்லாமல் போய்க் கேள்விக்குரியதாகி விடும்.

இதுதான் யதார்த்தம்; இதுதான் உண்மை நிலைமை; இதுவே நிஜம்.

இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு தமிழினம் – தமிழ்த் தலைமை – என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்பதே இன்று நம் முன்னால் இருக்கும் முக்கிய விவகாரமாகும்.

அதை ஆராய்வதற்குத்தான் இன்று மாலையும், நாளையும் தமிழர் தரப்புகள் தனித்தனியாகவும் ஒன்றாகவும் கூட்டங்கள் கூடுகின்றன.

ஒவ்வொரு விடயமும் வரும்போதும் அவையவற்றைக் கையாள்வதற்காக அவ்வப்போது ஒன்றிணைந்து காரியமாற்றுவதா? அல்லது எல்லாத் தமிழ்த் தேசியத் தரப்புகளும் குறைந்தபட்ச கொள்கை மற்றும் நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் ஒரு கட்டமைப்பாக சேர்ந்து இயங்குவதற்கு இணங்குவதா? அப்படி இணங்கினால் அந்தக் கட்டமைப்புத் தொடர்பான தெளிவுபடுத்தல்கள், விளக்கங்கள், கருத்து நிலைப்பாடுகள் யாவை? – என்பவை குறித்தெல்லாம் நேரத்துடன் பேசித் தீர்மானித்து, வரையறை செய்து விட்டு இயங்குவதே சிறப்பு.

இதற்கு அச்சாணியாக இருந்து பல தரப்புகளையும் இணைக்கும் பொறுப்பை மாவை சேனாதிராசா இதன் முக்கியத்துவம் உணர்ந்து ஆற்றுவார் என எதிர்பார்க்கிறோம்.

# மணிவண்ணன், மயூரனின் உறுப்புரிமையை நீக்குக!

## தமிழ்க் காங்கிரஸ் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கடிதம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்களான சட்டத்தரணி வி.மணிவண்ணன் மற்றும் மயூரன் ஆகிய இருவரது உறுப்புரிமையைநீக்குமாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், யாழ்ப்பாணம் மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக, யாழ்ப்பாணம் மாநகர சபையின் செயலாளருக்கும் அந்தக் கடிதத்தின் பிரதி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற அரசியல் இயக்கத்துடன் இணைந்து பயணிக்கின்றது.

அதனடிப்படையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சிபாரிசின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் விஸ்வலிங்கம் மணிவண்ணன், எமது கட்சியின் நியமன உறுப்பினராக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டார்.

எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒழுக்காற்று நடவடிக்கையால் விஸ்வலிங்கம் மணிவண்ணன், அந்தக் கட்சியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டுள்ளார்.

அதனால் அவரை யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்புறுப்புரிமையிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திகதியிடப்பட்டுள்ளது. அன்றைய தினமே யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து சட்டத்தரணி வி. மணிவண்ணனை நீக்கக் கோரும் எழுத்தாணை மனு, மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளப்பெறப்பட்டிருந்தது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தெரிவாகிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்ட மயூரனது மாநகர சபை உறுப்புரிமையை நீக்குமாறும் கட்சி கோரியுள்ளது.

# தனியார்துறை ஓய்வு வயதெல்லை 60 ஆக உயர்த்துவதற்கு ஏற்பாடு!

## தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவிப்பு



தனியார் துறையில் ஓய்வுபெறும் வயதெல்லையை 60ஆக உயர்த்துவது தொடர்பாக கவனம் செலுத்துவதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

தொழில் அமைச்சில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றுள்ள தொழில் ஆலோசனை சபைக் கூட்டத்தின்போது முன்வைக்கப்பட்ட இந்த பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் வயது முதிர்ந்தவர்களின் சனத்தொகை வெகுவாக அதிகரித்து, இளம் வயதினரின் வீதம் குறைந்து செல்வதன் மூலம் எதிர்கால தொழில் ஆளணியில் பாரிய வெற்றிடம் ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், உலகில் ஏனைய நாடுகளைப் போன்று ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு, தகைமையுள்ள ஊழியர்களின் சேவையைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளும் நோக்கில், தனியார் துறை ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 60 வரை அதிகரிக்க கவனம் செலுத்துவோம்.

அத்துடன், தொழில் ஆலோசனை சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட இந்தப் பிரேரணைக்கு சேவை சம்மேளனம் மற்றும் தொழிற் சங்கங்கள் பூரண இணக்கத்தை தெரிவித்தமைக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர் சுவர் வீழ்ந்து சாவு!

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடும்போது சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 44 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – அரியாலை, நாவலடி பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடும்போது, வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இந்த மரணம் ஏற்பட்டுள்ளது.



இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஹெரோயின் வைத்திருந்தவர் வவுனியாவில் கைது!

வவுனியா –பழைய பஸ் நிலையத்தில், ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் அவுசத பிட்டிய பகுதியை சேர்ந்த 31 வயது இளைஞரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

வவுனியா – பழைய பஸ் நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார், சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற நபரை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது அவரது உடமையில் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் இருப்பதை அவதானித்தமையுடன், அந்த நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்றனர்.

அந்த சந்தேகநபரிடம் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவகின்றமையுடன் நாளை சனிக்கிழமை அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# நான்கு ரஃபேல் போர் விமானங்கள் பிரான்ஸிலிருந்து இந்தியாவுக்கு!



மேலும் நான்கு ரஃபேல் போர் விமானங்கள் இன்னும் சில வாரங்களில் இந்தியாவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், போர் விமானங்கள் குறித்த நிலைமையை ஆராய விமானப்படை அதிகாரிகள் குழுவொன்று பிரான்ஸுக்குச் சென்றுள்ளது.

36 ரஃபேல் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்திய மதிப்பில் 56 ஆயிரம் கோடி ரூபாய்க்கு பிரான்ஸிடம் கடந்த 2016 இல் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அதில் முதற்கட்டமாக ஐந்து ரஃபேல் விமானங்கள் கடந்த ஜூலை 29ஆம் திகதி இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டமையுடன் செப் ரெம்பர் பத்தாம் திகதி இந்திய விமானப்படையில் இணைக்கப்பட்டன.

இந்நிலையில் அடுத்தக் கட்டமாக மூன்று அல்லது நான்கு ரஃபேல் விமானங்கள் இந்தியாவுக்கு சில வாரங்களில் கொண்டுவரப்படும் என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒவ்வொரு மாதமும் மூன்று அல்லது நான்கு விமானங்களை இந்தியாவுக்கு கொண்டு வருவதன் மூலம் இவ்வாண்டின் இறுதிக்குள் 36 விமானங்களும் வந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கொரோனா பரிசோதனைகளை அதிகரிக்க மோடி வலியுறுத்து!



இந்தியாவில் கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், கொரோனா பரிசோதனைகளை அதிகரிக்குமாறு மாநில அரசுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸுக்கு எதிரான ஆராய்ச்சி, தடுப்பூசி உருவாக்குதல் பற்றிய உயர்மட்ட ஆய்வுக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் –

இந்தியாவுக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த உலகுக்குமான குறைந்த செலவிலான, எளிதில் கிடைக்கக்கூடிய பரிசோதனைகளை, சிகிச்சைகளை, தடுப்பூசிகளை, விரைவாக வழங்குவதற்கான உறுதிப்பாடு வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

சுகாதார அதிகாரிகள் தொடர்ந்து விழிப்புணர்வுடன் இருக்கின்றமையோடு கொரோனா பரிசோதனைகளையும், அதிகரிக்க வேண்டும். பெருந்தொற்றுக்கு எதிராக அதிகளவிலான ஆயத்த நிலை அவசியம். – என வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில் கொரோனா தடுப்பூசி உருவாக்குவோர் மற்றும் தயாரிப்போரின் முயற்சிகளைப் பாராட்டிய பிரதமர் மோடி, இது போன்ற அனைத்து முயற்சிகளுக்கும் அரசின் வசதிகளையும், ஆதரவையும் தொடர உறுதி அளித்தார்.

தடுப்பூசிகளுக்கான சுகாதார அமைச்சகத்தின் விநியோகம், விநியோக முறைகள், போதுமான கொள்முதல் செய்வதற்கான வழிமுறைகள், தடுப்பூசிகளை சேமித்து வைப்பதற்கான தொழில் நுட்பங்கள், விநியோகத்துக்கான குப்பிகளை நிரப்புதல், பயனுள்ள விநியோகத்தை உறுதி செய்தல் போன்றவற்றையும் அவர் இதன்போது ஆய்வு செய்துள்ளார்.

# காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து கோர எதிர்க்கட்சிகள் திட்டம்!




கா;மீருக்கு மீண்டும் சிறப்பு அந்தஸ்து பெறுவதற்காக போராட்டங்களில் இணைந்து செயற்படும் வகையில் எதிர்க்கட்சிகள் இணைந்து புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளன.

இது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா தலைமையில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள பரூக் அப்துல்லா –

கடந்தாண்டு ஒகஸ்ட் 5 ஆம் திகதிக்கு முன் ஜம்மு – காஷ்மீரில் இருந்த நிலையே மீண்டும் தொடர வேண்டும். அதற்காக இணைந்து போராட புதிய கூட்டணியை அமைத்துள்ளோம்.

இது அரசியல் சாசனப் போராட்டம். எங்கள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. – எனத் தெரிவித்துள்ளார்.

ஜம்மு – காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்து கடந்தாண்டு நீக்கப்பட்டது. இதற்கு அங்குள்ள எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. சில தலைவர்கள் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் முதல்வர்கள் பரூக் அப்துல்லா, ஒமர் அப்துல்லா மெஹபூபா முப்தி ஆகியோர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகாராஷ்டிராவிலும் கடும் மழை இதுவரை பலியானோர் 30 பேர்!

மகாராஷ்டிராவில் பெய்து வரும் கனமழை காரணமாக இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் 16 பேர் சோலாப்பூரைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக நகரங்களின் வீதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதில் சோலாப்பூர் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்கள்தான் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இன்றும் கனமழை பெய்யும் என வானிலை மையம் எச்சரித்துள்ளது. மும்பை புனே உள்ளிட்ட நகரங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மார் இராணுவத்துக்கு முதன்முதல் நீர்மூழ்கி கப்பல்!

## வழங்குகிறது இந்தியா



ஐ.என்.எஸ். சிந்துவீர் என்ற நீர்மூழ்க்கிக்கப்பலை மியன்மாருக்கு வழங்கவுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இராணுவத்தளபதி மனோஜ் முகுந்த் நரவானே அண்மையில் மியன்மாருக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது இராணுவத் தளவாடங்களை வழங்க இந்தியா ஒப்புதல் அளித்திருந்தது.

இதனடிப்படையில் ஐ.என்.எஸ். சிந்துவீர் நீர்மூழ்கிக் கப்பலை மியன்மாருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மியன்மார் இராணுவத்தில் இதுவே முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் இறையாண்மையில் அயல் நாடுகள் தலையிடக்கூடாது!

## வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் எச்சரிக்கை



இந்தியாவின் இறையாண்மையில் அண்டை நாடுகள் தலையிட கூடாது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எல்லைப் பகுதியில் பதற்றம் நீடித்து வரும் நிலையில், புளூம்பர்க் பொருளாதார அமைப்பின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்–

இந்தியா – சீனாவுக்கு இடையிலான பேச்சுகள் தொடரும் நிலையில் சீனா இதுவரை ஒப்புக்கொண்டபடி படைகளை விலக்கிக் கொள்ள மறுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் லடாக் எல்லையில் சீனா படைகளைக் குவிப்பதால் பதற்றம் நீடித்து வருகின்ற நிலையில், இருநாட்டு இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் ஏழாவது சுற்று பேச்சு நடைபெற்றது. இந்தப் பேச்சின் விவரங்கள் இரகசியமானவை என்றும் அதனை வெளியிட இயலாது என்றும் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜம்மு – காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் லடாக் எல்லையின் மீது சீனாவுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள வெளியுறவு அமைச்சகம் அண்டை நாடுகள் இந்தியாவின் இறையாண்மையில் தலையிடக்கூடாது என்று கடும் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்தில் அவசரநிலையைக் கண்டித்து பாங்கொக்கில் எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம்





தாய்லாந்தில் அவசரநிலையை நிறைவேற்றுவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை கண்டித்து ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் பாங்கொக்கில் வீதிகளில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய பாங்கொக்கில் நேற்று (வியாழக்கிழமை) பிரதமர் பிரயுத் சான் – ஓச்சாவின் அலுவலகத்துக்கு வெளியே கூடியிருந்த 10 ஆயிரம் போராட்டக்காரர்களை கலகப்பிரிவு பொலிஸார் கலைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரிய அளவிலான அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில், முக்கிய போராட்டத் தலைவர்களான அனோன் நம்பா, மாணவர் ஆர்வலர் பரித் சிவாரக், பானுசயா சிதிஜிராவட்டன குல் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் எனத் தகவல்கள் கூறுகின்றன.

இரண்டு மாதங்களுக்கு முன்பு தேசத்துரோக குற்றச்சாட்டை எதிர்கொள்வதாக அர்னான் கூறினார். அதே நேரத்தில் போராட்டக்காரர்களைத் தொடர்ந்து போராடுமாறு வலியுறுத்தினார்.

குழந்தைகள் மற்றும் இளைஞர்களை எச்சரிக்க நான் விரும்புகிறேன், இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்கின்றமை எதிர்காலத்தில் உங்களைப் பாதிக்கும் என பாங்கொக் பொலிஸ்துறையின் துணைத் தலைவர் பியா தவிச்சாய் கூறினார்.

போராட்டக்காரர்கள் அனைவர் மீதும் வழக்குத் தொடரப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனிடையே, கைதிகளின் உரிமைகளை மதிக்க ஐரோப்பிய ஒன்றியம் தாய்லாந்தை வலியுறுத்தியுள்ளது.

தாய்லாந்து நாட்டில் 2014 ஆம் ஆண்டு இராணுவத் தளபதியாக இருந்த பிரயுத் சான் ஓச்சா, புரட்சி நடத்தி ஆட்சியைக் கவிழ்த்தார். ஆட்சி அதிகாரத்துக்கு வந்தார். கடந்த ஆண்டு நடந்த சர்ச்சைக்குரிய தேர்தலுக்கு பின்னர் அவர், அந்த நாட்டின் பிரதமராக பதவி ஏற்றார்.

ஆனால் அவருக்கு எதிராக மாணவர்கள் தலைமையிலான ஜனநாயக இயக்கம் பெரும் சக்தியாக உருவெடுத்தது.

பிரதமர் ஓச்சா பதவி விலக வேண்டும், புதிய அரசியல் சாசன சட்டம் இயற்றப்படவேண்டும், முடியாட்சியில் சீர்திருத்தங்கள் கொண்டு வர வேண்டும், குறிப்பாக மன்னரின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் இயக்கம் தொடர்ந்து அறவழியில் போராட்டங்கள் நடத்தி வருகிறது.

## எண்ணெய் குழாய்களை தாக்க அமீர்னியா முயற்சி!

அசர்பைஜான் குற்றச்சாட்டு



அர்மீனியா தனது எரிவாயு மற்றும் எண்ணெய் குழாய்களைத் தாக்க முயற்சித்ததாக, அசர்பைஜான் குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அசர்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அலியேவ் துருக்கிய ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் –

'அர்மீனியா எங்கள் குழாய்களைத் தாக்கி கட்டுப்பாட்டைக் கொண்டுவர முயற்சிக்கிறது. அர்மீனியா அங்குள்ள குழாய்களைக் கட்டுப்படுத்த முயன்றால், அதன் விளைவு அவர்களுக்கு கடுமையாக இருக்கும் என்று நான் சொல்ல முடியும்' எனக் கூறினார்.

எனினும் இந்த குற்றச்சாட்டை அர்மீனியா மறுத்துள்ளது. அத்துடன் மனிதாபிமான யுத்த நிறுத்தத்தை மீறி, அர்மீனிய இனத்தவர்கள் நிர்வகிக்கப்படும் சிறிய நிலப்பரப்பின் கட்டுப்பாட்டை அசர்பைஜான் படைகள் கைப்பற்ற முயற்சிக்கின்றன என்று கூறியுள்ளது.

இதனிடையே துருக்கிய ஜனாதிபதி தயிப் எர்டோகன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி நாகோர்னோ – கராபாக் பிரச்சினைக்கு அங்காரா ஒரு நிரந்தரத் தீர்வை விரும்புவதாகத் தெரிவித்தார்.

இதன்போது, நாகோர்னோ – கராபாக் மோதலில் மத்திய கிழக்கு போராளிகள் பங்கேற்கின்றமை தொடர்பாக புடின் தனது கவலைகளை வெளிப்படுத்தினார். ஆனால் இதனை அங்காரா மறுத்தது.

மோதலில் மாஸ்கோ – மத்தியஸ்த போர்நிறுத்தத்தின் முக்கியத்துவத்தை இரு தலைவர்களும் மீண்டும் உறுதிப்படுத்தினர் என கிரெம்ளின் தெரிவித்துள்ளது.

## பாலியல் துஷ்பிரயோகம்: ஐவருக்கு மரண தண்டனை!

பங்களாதேஸின் புதிய சட்டத்தின் பிரகாரம்



2012 இல் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தொடர்பாக, பங்களாதேஷ் நீதிமன்றம் ஐந்து பேருக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான முறைகேடு வழக்குகளைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு தீர்ப்பாயத்தால் நேற்று (வியாழக்கிழமை) இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் சேக் ஹசீனாவின் அரசாங்கம் இவ்வாறு துஷ்பிரயோகம் தொடர்பான மரண தண்டனையை அறிமுகப்படுத்தியதன் பின்னர் வழங்கப்பட்ட முதலாவது தண்டனை இது வென்பது குறிப்பிடத்தக்கது.

2012 இல் அந்த சிறுமியை, அவரது காதலன் ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றமையுடன், காதலனின் இரண்டு நண்பர்களும் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர். அத்துடன், வேறு இருவர் அவர்களுக்கு உதவியுள்ளனர்.

இந்நிலையில், குறித்த ஐவரும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர் என வழக்கறிஞர் அஹமது தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பங்களாதேஷில் பாலியல் துஷ்பிரயோகங்களில் 3 வீதம் மட்டுமே முறைப்பாடுவரை வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மாத்திரம் குறைந்தது 208 பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளமையுடன், இது ஆயிரம் வழக்குகளில் ஐந்தில் ஒரு பங்கு என உள்ளூர் உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

மேலும், 2013 முதல் பங்களாதேஷில் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் 23 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என்பதுடன் இதுவரை ஆயிரத்து 718 பேர் மரணதண்டனையில் உள்ளனர்.

இதேவேளை, பாலியல் துஷ்பிரயோகத்திற்காக மரண தண்டனை அறிமுகப்படுத்தப்படுவதை மனித உரிமை ஆர்வலர்கள் விமர்சித்துள்ளனர் என்பதுடன் இது பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைக்காது எனத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, பங்களாதேஷ் பெண்கள் எதிர்கொள்ளும் பயங்கரமான மிருகத்தனத்தை நிவர்த்திசெய்வதற்கான உண்மையான நடவடிக்கை இல்லாதமையே இதற்கான காரணம் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

## பதவியைத் துறந்துள்ளார் கிர்கிஸ்தான் ஜனாதிபதி!

நாட்டில் அரசியல் அமைதியின்மைக்கு மத்தியில் கிர்கிஸ்தானின் ஜனாதிபதி சூரன்பே ஜீன்பெகோவ் இன்று (வியாழக்கிழமை) பதவி விலகினார்.

பதவி விலக முடிவு செய்தமை தொடர்பாக சூரன்பே ஜீன்பெகோவ் கூறுகையில் –

நான் அதிகாரத்தில் ஒட்டிக்கொள்ளவில்லை.

கிர்கிஸ்தான் வரலாற்றில் மக்கள் மீது இரத்தக்களரி மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்த அனுமதித்த ஒரு ஜனாதிபதியாக நான் கீழே செல்ல விரும்பவில்லை. நான் இராஜினாமா செய்வதற்கான முடிவை எடுத்துள்ளேன்.

இராணுவ மற்றும் பாதுகாப்புப் படையினர் தங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தி அரச குடியிருப்பைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பார்கள். இரத்தம் தவிர்க்க முடியாமல் சிந்தப்படும். ஆத்திரமூட்டல்களுக்கு விழக்கூடாது என்று இரு தரப்பினரையும் நான் கேட்டுக்கொள்கி றேன்.

– எனக் கூறினார்.



ஒக்ரோபர் 4ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், போட்டியிட்ட 120 இடங்களில் இரண்டு அரசாங்க சார்பு கட்சிகள் 107 இடங்களை வென்றமையையடுத்து, இதில் மோசடி இடம்பெற்றதாகக் கூறி தலைநகர் பி;ெகக்கில் எதிர்ப்பாளர்கள் வீதிகளில் இறங்கி போராடினர். இந்த மோதலைத் தொடர்ந்து தேர்தல் இரத்து செய்யப்பட்டது.

புதிய தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் இராஜினாமா செய்வதாக ஜீன்பெகோவ் முன்பு கூறியிருந்தார். தொடர்ந்தும் அமைதியின்மை தொடர்ந்தது.

இதையடுத்து வீதிகளில் ஏற்பட்ட மோதல்களால், ஜீன்பெகோவ் வெள்ளிக்கிழமை அவசரகால நிலைமையை அறிவித்தார்.

இதனால் ஒருவர் உயிரிழந்தமையோடு, குறைந்தது 1,200பேர் காயமடைந்தனர். இவ்வாறான தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு மத்தியில் சூரன்பே ஜீன்பெகோவ் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

## அமெரிக்காவில் கொரோனா இந்தவாரம் 11 வீதம் அதிகம்

அமெரிக்காவை உலுக்கிவரும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றின் தாக்கம், கடந்த வாரத்தை விட 11 வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

நோய்த்தொற்று பரவல் தொடர்ந்து அதிகரித்து வருகின்ற போதும், மீண்டும் பொதுமுடக்கம் அமுல்படுத்தப்படாது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் நோய் தடுப்பு பணிகளை நன்றாகவே மேற்கொண்டு வருவதாகவும், மீண்டும் ஒரு பொதுமுடக்கம் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் தற்போது கொரோனா வைரஸின் இரண்டாவது அலை பரவத்தொடங்கியுள்ளதாக கூறப்படும் நிலையில், அங்கு இதுவரை 82 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு லட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

# கொரோனாவின் முதல்சுற்று – தேர்தலுக்கு; 2 ஆவது சுற்று – 20 இற்கு உபயோகம்!

## சஜித்தின் ஆய்வு வெளிப்பாடு இது



கொழும்பு, ஒக்.16

கொரோனா வைரஸ் தொற்று அலையின் முதல் சுற்றை பொதுத் தேர்தலுக்காக பயன்படுத்திய அரசாங்கம் இரண்டாம் சுற்றை அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற பயன்படுத்துகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கொரோனா தொற்று அலை நாட்டில் கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கையை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தற்போது பல பகுதிகளுக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப் பட்டும் உள்ளன எனக்; குறிப்பிட்டுள்ள அவர் அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையே கொரோனா இரண்டாம் சுற்றாகப் பரவலடைய முக்கிய காரணம் எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தவும், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நிபந்தனைகளற்ற ஒத்துழைப்பை எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு வழங்குகிறோம் என ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டார் என அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் ஆரம்பத்தில் பரவலடைந்த காலத்தில் அரசாங்கம் பொதுத்தேர்தலை வெற்றி கொள்ளும் நோக்கில் அரசியல்வாதிகள் ஊடாக மக்களுக்கு ஐயாயிரம் ரூபாவை வழங்கியது.

ஆனால், தற்போது தேர்தல் ஏதும் கிடையாது எனச் சுட்டிக்காட்டியுள்ள சஜித் பிரேமதாஸ, தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலிலுள்ள பிரதேசத்தில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ரிஷாத்தின் மனைவியிடம் குற்றப்பிரிவு வாக்குமூலம்

கொழும்பு, ஒக்.16

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவியிடம் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர்.

கொழும்பிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வைத்து நேற்று (வியாழக்கிழமை) மாலை இந்த வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தன்னைக் கைதுசெய்வதை தவிர்க்குமாறு உத்தரவிடக்கோரி, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.


கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் அவரைக் கைதுசெய்யுமாறு சட்டமா அதிபரால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ரிஷாத் பதியுதீனைக் கைது செய்வதற்காக பொலிஸ் குழுக்கள் சிலவற்றை நியமித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனினும் அவர் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனவும், அவர் தலைமறைவாகியுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், அவர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர் வெளிநாடு செல்லவும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

# கொரோனா ஆபத்தான பகுதிகள் வரைபடம் வெளியாகி உள்ளது!




இலங்கையில் கொரோனா எங்கெல்லாம் அதிக ஆபத்தாக இருக்கிறது என்பது தொடர்பிலான பகுதிகளின் வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

தொற்றுநோயியல் பிரிவால் இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார மருத்துவ அதிகாரிகளின் வகைப்படுத்தல், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களின் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

# அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ரணில், மைத்திரிக்கு அழைப்பு!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 19 ஆம் திகதி இருவரையும் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க முன்வைத்த குற்றச்சாட்டுக்கு அமைய இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் கடந்த நாள்களில் ஆஜராகி சாட்சியங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப் பொதி விற்பனை செய்தவருக்கும் கொரோனா

வத்தளை, ஹெந்தலை சந்தியில் உணவுப் பொதிகளை விற்பனை செய்யும் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த நபரின் மனைவி பிரன்டிக்ஸ் நிறுவனத்தின் பணி புரிந்து வரும் நிலையில் அவருக்கு ஏற்கனவே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையிலேயே தற்போது அவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த நபர் கடந்த 03 ஆம் திகதி வரை ஹெந்தலை சந்தியில் உணவுப் பொதிகளை விற்பனை செய்து வந்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில் அந்தக் காலப்பகுதியில் அவரிடம் உணவுப் பொதிகளை பெற்றவர்கள் இருந்தால் உடனடியாக அருகில் உள்ள பொது சுகாதார பரிசோதகருக்கு அல்லது பிரதேச சுகாதார அதிகாரிக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# திட்டமிட்ட சுற்றாடல் அழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோரை சுற்றிவளைக்க பிரத்தியேக பிரிவு!

திட்டமிட்ட சுற்றாடல் அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை சுற்றிவளைப்பதற்காக பிரத்தியேக பிரிவொன்றை ஸ்தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விடயதஷ்;தக் குறிப்பிட்டுள்ளார்.



இராணுவம் மற்றும் பொலிஸின் உயர்மட்ட அதிகாரிகள் இருவரின் தலைமையில் இந்த பிரிவு ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அழிப்பு முன்னெடுக்கப்படும் போது உடனடியாக அதனை சுற்றிவளைக்கும் நடவடிக்கையில் இந்தப் பிரிவு ஈடுபடவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆறுகளைப் பாதுகாக்க புதிய வேலைத்திட்டம்!

103 ஆறுகளை பாதுகாக்கும் நோக்கில் புதிய வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பிலான முறைப்பாடுகளை செய்வதற்காக சுற்றாடல் அமைச்சு புதிய அவசர அழைப்பு இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சின் 1991, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1981, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 1921 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு மேற்கொண்டு முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

# முகக் கவசம் அணியாது விடுதியில் தங்கிய இருவருக்கு தலா ஒரு லட்சம் சரீரப் பிணை!

முகக்கவசம் அணியாமல் விடுதியில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவர் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொள்ளுபிட்டி பகுதியில் தங்கும் விடுதி ஒன்றில் முகக்கவசம் அணியாமல் இருந்த இளைஞர் மற்றும் யுவதியை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் கொரோனா வைரஸ் பரவும் விதத்தில் செயற்பட்டார்கள் என அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அந்த இருவரும் தாங்கள் கொரோனா தொற்றுப் பரவும் விதத்தில் செயற்படவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்தமையையடுத்து இந்த வழக்கு ஜனவரி 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், அந்த இருவரும் மதிய உணவை உண்பதற்காக முகக்கவசம் அணியாமல் இருந்தனர் என அவர்களது சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் இருவரையும் இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க புறக்கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# மீன் வியாபாரிக்கு கொரோனா தொற்று!

கிரிந்திவெல – குட்டிகல பகுதியில் மீன் வியாபாரி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மீன் வியாபாரியுடன் நெருங்கிப் பழகிய சுமார் 80 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என தொம்பே பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மீன் வியாபாரி குட்டிகல, ரந்தாவான, மெத்தேகம, போகஹகும்புர, கிரிந்திவெல மற்றும் பெபில்வெல ஆகிய பிரதேசங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2020 இல் வெளியிடப்பெற்றது.